**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.514/2019**
**Prosecution Witness P.W. 12**
.....

Name : மருத்துவர். தேவி பியான்ஷா Calling : இணை பேராசிரியர்
Father's name : திரு. மு.அழகர் Religion : இந்து
Village : T.புதூர் Age : 48
Taluk : சிவகங்கை

நாள் - **12.03.2026.**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 09.04.2019 ம் தேதி நான் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவிப்பேராசிரியராக பணியில் இருந்த போது, அண்ணாநகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின்படி குற்ற எண்.296/2019 சட்டப்பிரிவு 174 குவிமுச-வின் கீழ் பதியப்பட்ட வழக்கில் மு.நி.கா.1971 ராஜ்குமார் என்பவரால் அடையாளம் காட்டப்பட்ட கோவிந்தராஜ் என்ற 40 வயதுள்ள ஆண்பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்ய கொடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் அன்று காலை 10.40 மணிக்கு வேண்டுகோள் பெற்றேன்.

**அடையாளங்கள்**

1. வலது முழங்காலில் ஒரு பழைய காயத்தழும்பு இருந்தது.
2. வலது கையில் ஒரு கருப்பு மச்சம் இருந்தது.

பிரேதத்தை அன்று காலை 10.45 மணிக்கு பரிசோதனை செய்த போது, மரணவிறைப்புத் தன்மை உடம்பில் இருந்து நீங்கி இருந்தது.

**தோற்றம்**

1. 40 வயது மதிக்கக்கூடிய சாதாரண போசாக்குள்ள ஆண் பிரேதமாகும். கை, கால் விரல்கள் நீல கலரில் இருந்தது. முகம், உதடு வீங்கியும், கன்றியும், கண்ணில் உள்ள வெண்திரையில் இரத்தக்கசிவு காணப்பட்டது.

**இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள்**

1. வலது முன்கையின் பின்புறத்தில் 8 X 0.5 செ.மீ அளவில் ஒரு சிவந்த மரக்கலர் உள்ள சிராய்ப்பு காயம் இருந்தது.
2. வலது முழங்கையின் பின்புறத்தில் 3 X 1 செ.மீ அளவில் சிவந்த மரக்கலர் உள்ள சிராய்ப்பு காயம் இருந்தது.
3. வலது முழங்கையின் பின்புறத்தில் 1 X 1.5 செ.மீ அளவில் சிவந்த மரக்கலர் உள்ள சிராய்ப்பு காயம் இருந்தது.
4. இடது கன்னத்தில் 7 X 5 செ.மீ அளவில் நீலநிறத்தில் இரத்தம் கன்றிய ஒரு காயம் இருந்தது.
5. கீழ் உதட்டின் உள்புறத்தில் 2 X 1 செ.மீ நீலநிறத்தில் இரத்தம் கன்றிய ஒரு காயம் இருந்தது.
6. வலதுபக்க தாடையில் 3 X 3 செ.மீ அளவில் நீலநிற இரத்தம் கன்றிய காயம் இருந்தது.
7. வலதுபக்க கழுத்தில் 9 X 2 செ.மீ அளவில் நீலநிற கன்றிய காயம் இருந்தது.
8. இடதுபக்க முகத்தில் 16 X 8 செ.மீ அளவில் நீலநிற கன்றிய காயம் இருந்தது.
9. வலது முழங்கையின் பின்புறத்தில் 6 X 4 செ.மீ அளவில் நீலநிற கன்றிய காயம் இருந்தது.

**தலை**

தலையை கூறாய்வு செய்ததில் இடதுபக்க முன்புற தலை தோலில் அடிப்புறத்தில் 10 X 8 செ.மீ அளவில் நீலநிற கன்றிய காயம் காணப்பட்டது. உச்சிப்பகுதியிலும், வலது பக்க பக்கவாட்டுப் பகுதியிலும் உள்ள மூளைச்சவ்வின் வெளிப்புறத்தில் 10 X 8 X 1 செ.மீ அளவில் இரத்தக்கட்டு உறைந்து காணப்பட்டது. இருபக்க மூளைபகுதியின் உள்புறத்திலும், வெளிப்புறத்திலும் பரவலான இரத்தக்கசிவு காணப்பட்டது. மற்ற உள்உறுப்புகளை கூறாய்வு செய்ததில் மார்பறை மற்றும் வயிற்றறை காலியாக இருந்தது. இருதய அறையில் 15 மிலி அளவிலான வைக்கோல் நிற திரவம் காணப்பட்டது. இருதயத்தின் வலது பகுதியில் நீர்த்த இரத்தமும், இடது பகுதி காலியாகவும் இருந்தது. மகாதமனி, குரல்நாண், மூச்சுக்குழாய் மற்றும் நாவடி எலும்பு முழுமையாக இருந்தது. இருநுரையீரல்கள், இரு சிறுநீரகங்கள், கல்லீரல், மண்ணீரல் ஆகியன வெட்டுத் தோற்றத்தில்

இரத்தச்செறிவுடன் காணப்பட்டன. வயிற்றில் 50 மிலி அளவிலான அரக்கு நிற திரவம் ஒரு வித கார நெடியுடனும், முன்சிறுகுடலில் 20 மிலி அளவிலான அரக்கு நிற திரவம் ஒரு வித கார நெடியுடனும் காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. மேற்கண்ட பிரேதத்தில் இரந்து பிரேத உள்உறுப்புகள் எடுக்கப்பட்டு, இரசாயனபகுப்பாய்விற்காக ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் முதல்நிலை சடலக்கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ.11** ஆகும். 14.08.2019 ம் தேதியன்று உள்உறுப்புகள் பரிசோதனை அறிக்கை பெற்றேன். அதில் விஷப்பொருட்கள் எதுவும் இல்லை, ஆகவே இந்த வழக்கில் இறந்து போனவர் அவருக்கு ஏற்பட்ட தலைக் காயத்தினாலும், சடக்கூறாய்வு செய்வதற்கு 24 முதல் 36 மணி நேரத்திற்குள் மரணம் ஏற்பட்டிருக்கும் என்று நான் வழங்கிய இறுதிக்கருத்துரை **அ.சா.ஆ.12** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் சடலக்கூறாய்வு அறிக்கையின் அடிப்படையில் இறந்தவரை கடுமையாக கீழே தள்ளிவிடும் போது அதன் விளைவுகளாக உள்உறுப்புகளில் காயம் ஏற்பட்டு, இறப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

<u>**குறுக்குவிசாரணை**</u>

மேற்படி காயங்கள் இறந்தவர் குடிபோதையில் அவராக கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி காயங்கள் இருசக்கரவாகனத்தில் இறந்தவர் வேகமாக மோதியதில் ஏற்பட கூடிய காயங்கள் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சுருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.03.13 14:55:16 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.